# QB365 Question Bank Software Study Material

## நிதிப் பொருளியல் முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 12ம் வகுப்பு

## பொருளியல்

மொத்த மதிப்பெண் : 75

**2 மதிப்பெண் வினாக்கள்**

10 x 2 = 20

1) "பொது நிதி" வரையறு

**பதில் :** "பொது நிதி என்னும் பாடம் அரசியலுக்கும் பொருளியலுக்கும் இடையே எல்லைக் கோடாகத் திகழ்கிறது. இது அரசின் பொது அதிகார வெவ்வேறு அமைப்பின் வரவு செலவுகளைப் பற்றியும் அது ஒன்றோடொன்று சரி செய்து கொள்வதைப் பற்றியும் கருத்தில் கொள்கிறது." என்று டால்டன் கூறுகிறார்.
(அல்லது)
“அரசின் வருவாய் மற்றும் செலவுகளின் இயல்பையும், கொள்கைகளையும், ஆராய்வதே பொது நிதியியல் ஆகும்." என்று ஆடம் ஸ்மித் கூறுகிறார்.

2) "பொது வருவாய்" என்றால் என்ன?

**பதில் :** பொது வருவாய் என்பது வருவாயைப் பெருக்கக் கூடிய முறைகளான வரி வருவாய்கள், வரியல்லா வருமானங்கள் பற்றியும், வரிக்கொள்கை, வரிவிகிதம், வரிச்சுமை, வரியின் தாக்கம், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றையும் விளக்குகிறது.

3) "வரி", "கட்டணம்" வேறுபடுத்து.

**பதில் :**

| வரி | கட்டணம் |
|---|---|
| எந்த ஒரு நன்மையும் எதிர்பாராமல் அரசிற்கு கட்டாயம் செலுத்த வேண்டிய தொகை | அரசிற்கான மற்றொரு வருவாய் ஆதாரம் |
| அதிகார அமைப்பால் விதிக்கப்பட்ட கட்டாய் பங்களிப்பு | பொது நிருவாகத்தில் செய்யப்படும் சேவைக்காக விதிக்கப்படுகிறது. |
| எ.கா. வருமான வரி, விற்பனை வரி | எ.கா. பாஸ்போர்ட் கட்டணம், ஓட்டுநர் உரிம கட்டணம். |

4) "சுழிய அடிப்படை வரவு செலவுத் திட்டம்" குறிப்பு வரைக.

**பதில் :** இந்திய அரசு 1987-88ல் சுழிய வரவு செலவுத்திட்டத்தை தாக்கல் செய்தது.
இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும். புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.
சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக பொருளாதார நோக்கங்களின் பார்வையில் மறு ஆய்வு செய்யப்பட்டு நியாயப்படுத்தும்.

5) நேர்முக வரிக்கு இரு எடுத்துக்காட்டு தருக.

**பதில் :** நேர்முக வரிக்கு உதாரணங்களாவன;
1. வருமான வரி
2. சொத்து வரி

6) GST யின் கூறுகள் யாவை?

**பதில் : GST-ன் உள்ளடக்கங்கள் மூன்று வகைப்படும் அவை.**
CGST - மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மாநிலத்திற்குள்/ ஒன்றியப்பகுதி)
SGST- மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மாநிலத்திற்குள்/ ஒன்றியப்பகுதி)
IGST- மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மராட்டிய மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு பொருள் விற்பனை).

7) "பொதுக்கடன்" என்பதன் பொருள் யாது?

**பதில் :** "பொதுக்கடன் என்பது நிதிக் கருவிகள் வாயிலாக அரசானது தனியார் துறையிலுள்ள தனிமனிதர்கள் அல்லது நிறுவனங்களிடம் பெறுவதாகும். இதனைக் கொண்டு தனியார் துறையைத் தூண்டி அதன் மனித வளங்கள், பிற உண்மையான வளங்களைப் பெருக்குவதற்கும், அந்த நிதியினைக் கொண்டு வளங்களை வாங்குதல் அல்லது நலத்தை உருவாக்குதல் அல்லது மானியங்களை வழங்குதல் ஆகியவற்றை செய்தலைக் குறிப்பதாகும்."

8) 'வரி'-வரையறை

**பதில் :** பிரதிபலன் எதிர்பாராமல் மக்கள் அரசிற்கு கட்டாயம் செலுத்த வேண்டிய தொகையாகும்.

9) வரவு-செலவுத்திட்டத்தின் வகைகள் யாவை?

**பதில் :** 1. வருவாய் வரவு செலவுத்திட்டம்
2. மூலதன வரவு செலவுத்திட்டம்
3. துணை வரவு செலவுத்திட்டம்
4. நிதிக்கு வாக்கெடுப்பு வரவு செலவுத் திட்டம்
5. பூஜ்ய வரவு செலவுத் திட்டம்
6. செயல்திறன் வரவு செலவுத்திட்டம்
7. படிநிலை மற்றும் சமனற்ற வரவு செலவுத்திட்டம்.

10) பொதுக்கடன் தீர்வு என்றால் என்ன?

**பதில் :** பொதுக்கடன் தீர்வு என்பது பொதுக்கடனை திரும்ப செலுத்தும் வழிமுறையைக் குறிக்கும்.

## 3 மதிப்பெண் வினாக்கள் — 10 x 3 = 30

11) வரி விதிப்பு விதிகளை விவரிக்க.

**பதில் :** ஆடம் ஸ்மித்தின் கருத்துப்படி நான்கு புனித வரி விதிப்புகள் உள்ளன. அவையாவன:
**1. செலுத்தும் திறன் பற்றிய விதி:**
மக்களின் வரி செலுத்தும் திறனுக்கு ஏற்ப அரசானது வரி விதிக்க வேண்டும்.
ஏழை அல்லது நடுத்தரப்பிரிவினரை ஒப்பிடும் போது செல்வந்தர்கள் அதிக வரி செலுத்த வேண்டும்.
**2. நிச்சயத்தன்மை விதி:**
வரி வீதம் அல்லது செலுத்தும் காலம் குறித்து நிச்சயமற்ற தன்மை இல்லாத வகையில் அரசு வரியினை விதிக்க வேண்டும்.
அரசு தன்போக்கிற்கு வரிகளை விதித்தால் அது மக்களின் செலுத்தும் திறன் மற்றும் வேலை செய்யும் திறனையும் பாதிக்கும்.
**3. வசதி விதி:** வரி செலுத்துவோர்கள் வரியை எளிதாகச் செலுத்தும் வண்ணம் வசதியான ஏற்பாட்டை செய்ய வேண்டும்.
**4. சிக்கன விதி :**
அரசு வரிகளை வசூலிப்பதற்கு பணம் செலவிடுகிறது.
எடுத்துக்காட்டாக, வரிகளை வசூலிப்பவர்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. வசூலிப்பதற்கான செலவு வரிகளை விட அதிகமாக இருந்தால் அவை மோசமான வரிகளாகும்.

12) தனியார் நிதிக்கும் பொது நிதிக்கும் உள்ள மூன்று ஒற்றுமைகளை எழுதுக.

**பதில் :** **தனியார் நிதி மற்றும் பொது நிதியின் ஒற்றுமைகள்:**
**பகுத்தறியும் தன்மை:** பொது நிதியும் தனி நிதியும் பகுத்தறிவை அடிப்படையாகக் கொண்டவை. இரண்டும் குறைந்த செலவில் அதிக நலத்தைப் பெறுவதையே முக்கியமான நோக்கமாகக் கொண்டுள்ளன.
**கடனுக்கான வரையறை:** இரண்டுக்குமான கடன்கள் வரையறை கொண்டுள்ளது. அரசின் பற்றாக்குறை வரவு, செலவு, திட்டத்திற்கும் எல்லை இருக்கிறது.
**வளங்களின் பயன்பாடு:** தனியார் துறையும் பொது துறையும் வரையறுக்கப்பட்ட வளங்களையே கொண்டுள்ளன. இவ்விரண்டும் உத்தம அளவில் வளங்களைப் பயன்படுத்த முனைகின்றன.

13) தற்கால அரசின் பணிகள் யாவை?

**பதில் : தற்கால அரசின் பணிகள் :**
இராணுவம்
நீதித்துறை
நிறுவனங்கள்
சமூகநலன்
கட்டமைப்பு
பேரின பொருளாதார கொள்கை
சமூக நீதி
முற்றுரிமை கட்டுப்பாடு.

14) வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.

**பதில் : வரியின் பண்புகளாவன:**
வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடிய ஒன்றாகும்.
ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.
வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத்தொகை போன்று விதிக்கப்படுவதல்ல.

15) நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளைக் கூறுக.

**பதில் :**

| ஒப்பீட்டிற்கான அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| பொருள் | நேர்முக வரி என்பது ஒருவரின் வருமானம், செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்குச் செலுத்துவதாகும். | மறைமுக வரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள், பணிகள் மீது விதிக்கப் பட்டு மறைமுகமாக அரசுக்குச் செலுத்துவ தாகும் . |
| இயல்பு | வளர்வீதம் | தேய்வீதம் |
| சுமையும் தாக்கமும் | ஒரே ஒருவர் மீது விழுகிறது. | பலர் மீதும் வரிச்சுமை விழுகிறது. |

16) முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன?

**பதில் :** முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும். இது அரசின் உண்மையான சுமையைக் காட்டும்.
மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியைக் கணக்கில் கொள்ளாது. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.
எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும்.

| |
|---|
| முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) - வட்டி செலுத்துதல் (IP) |

17) பொதுக்கடனைத் திரும்பச் செலுத்துவதற்கான மூன்று முறைகளைக் கூறுக.

**பதில் : பொதுக்கடனை திரும்ப செலுத்தும் முறைகளாவன:**
**வரவு செலவுத் திட்ட உபரி:**
உபரி வரவு செலவுத் திட்டத்தை அரசு தாக்கல் செய்யும்போது அந்த உபரியை கடன் திருப்பிச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.
பொது வருவாய், பொதுச் செலவைவிட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது.
**பகுதியாகச் செலுத்துதல்:**
இந்த முறையின் கீழ் அரசு பொதுக்கடனை சமமான ஆண்டு தவணைகளாகச் செலுத்துகிறது.
இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக எளிதான முறையாகும்.
**வட்டி வீதத்தை குறைத்தல்:**
நிதிச் சிக்கல் ஏற்படும் நேரங்களில் கட்டாயமாக வட்டியைக் குறைத்துக் கடனை செலுத்துவதும் ஒரு வகையான கடன் தீர்வு முறையாகும்.

18) GST யின் நன்மைகள் யாவை?

**பதில் :** (i) GST என்பது தொழில்நுட்ப ரீதியில் அமைந்தது.
(ii) பதிவு செய்தல், வரித்தாக்கல் செய்தல், கூடுதலாக செலுத்தியதை திரும்பப் பெறுதல், கோரிய விளக்கங்களுக்கு பதிலளித்தல் போன்றவற்றை GST இணையத்தில் செய்கிறது.
(iv) இதனால் அனைத்து செயல்பாடுகளும் விரைவாக நடைபெறுகிறது.

19) பொதுக் கடனின் வகைகள் யாவை?

**பதில் : உள்நாட்டு பொதுக்கடன்:**

(i) ஒரு நாட்டிற்குள் குடிமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அரசினால் பெறப்படும் கடனாகும்.

(ii) இது செல்வத்தை மாற்றிக் கொள்வது பற்றியதாகும்.

**உள்நாட்டு பொதுக்கடனின் ஆதாரங்கள்:**

(i) அரசு பத்திரங்கள் மற்றும் ஆவணங்களை தனிநபர்கள் வாங்குதல்

(ii) அரசிடமிருந்து பத்திரங்களை தனியார் மற்றும் பொதுத்துறை வங்கிகள் பெறுதல்.

(iii) பண அளிப்பு வாயிலாக அரசிற்கு மைய வங்கி கடன் வழங்குகிறது.

20) உள்நாட்டு, வெளிநாட்டு பொதுக்கடனை வேறுபடுத்துக.

**பதில் :**

| **உள்நாட்டு பொதுக்கடன்** | **வெளிநாட்டு பொதுக்கடன்** |
|---|---|
| உள்நாட்டு கடன் என்பது ஒரு நாட்டிற்குள் குடிமக்கள் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து அரசினால் பெறப்படும் கடனாகும். | பன்னாட்டு நிறுவனம் மற்றும் வெளிநாட்டிலிருந்து பெறப்படும் கடன் அயல்நாட்டு கடன் என அழைக்கப்படுகிறது. |
| உள்நாட்டு பொதுக்கடன் என்பது செல்வதை மாற்றிக்கொள்வது பற்றியதாகும். | IMF, உலக வங்கி IDA, ADB போன்ற அமைப்புகளிடம் வெளிநாட்டு அரசுகளிடம் கடன் பெறுவது அயல்நாட்டுக் கடன்களுக்கான முக்கிய ஆதாரமாக உள்ளது. |

## 5 மதிப்பெண் வினாக்கள்

5 x 5 = 25

21) மறைமுக வரிகளின் நன்மைகள் யாவை?

**பதில் : மறைமுக வரிகளின் நன்மைகள்:**

**பரந்து காணப்படுதல் :**

எல்லா நுகர்வோர்களும் அவர்கள் ஏழை அல்லது பணக்காரர்களாக இருந்தாலும் மறைமுக வரிகளைச் செலுத்த வேண்டும்.

இதனால்தான் நேர்முக வரிகளை விட மறைமுக வரிகள் அதிகமானவர்களை உள்ளடக்கியுள்ளது.

**சமத்துவம்:**

பணக்காரர்களால் பயன்படுத்தப்படக்கூடிய ஆடம்பரப் பண்டங்கள் மீது அதிக வரி சுமத்தப்படுவதால் மறைமுக வரி சமத்துவ விதியின் அடிப்படையில் அமைகிறது.

**சிக்கனத் தன்மை:**

உற்பத்தியாளர்களும், சில்லறை விற்பனையாளர்களும் வரியை வசூலித்து அரசுக்கு செலுத்துவதால் வசூலிப்பதற்கான செலவு குறைவாகிறது.

**உடலுக்கு தீங்கான பண்டங்களின் நுகர்வைக் குறைக்கிறது:**

அரசானது உடலுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய பண்டங்கள் மீது மறைமுக வரியை விதிக்கிறது.

எ.கா. புகையிலை, மது போன்றவை மீதான் வரி ஆகும்.

**வசதியானது:**

மறைமுக வரியானது பண்டங்கள், பணிகள் மீது விதிக்கப்படுகிறது.

நுகர்வோர் இதனை வாங்கும்போது விலையுடன் சேர்த்து செலுத்திவிடுவதால், வரி செலுத்துவதை உணர்வதில்லை.

22) கடன் திரும்பச் செலுத்தும் முறைகளை விளக்குக.

**பதில் : பொதுக்கடன் பின்வரும் வழிகளில் கடன் தீர்க்கப்படுகிறது:**

**மூழ்கும் நிதி:**

கடனுக்கென அரசு தனியொரு நிதியினை ஏற்படுத்தும் அதனை "மூழ்கும் நிதி" என்பர்.

அரசு ஒவ்வொரு ஆண்டும் ஒரு குறிப்பிட்ட நிலையான தொகையை செலுத்துகிறது.

கடன் முதிர்ச்சியடையும்போது வட்டியோடு அசலையும் சேர்த்து வழங்கும் வகையில் இந்நிதி பெருகிவிடும்.

**கடனை மாற்றுதல்:**

இம்முறையில் பழையக் கடனை புதியக் கடனாக மாற்றப்படுகிறது.

இம்முறையின் கீழ் அதிக வட்டி கொண்ட பொதுக்கடன் குறைவான வட்டி கொண்ட பொதுக்கடனாக மாற்றப்படுகிறது.

**வரவு செலவுத் திட்ட உபரி :**

உபரி வரவு செலவுத் திட்டத்தை அரசு தாக்கல் செய்யும்போது, அந்த உபரியை கடனைத் திரும்பச் செலுத்த பயன்படுத்திக் கொள்ளும்.

பொதுவருவாய், பொதுச் செலவை விட அதிகரிக்கும் போது உபரி ஏற்படுகிறது.

**பகுதியாகச் செலுத்துதல் :**

அரசு பொதுக்கடனை சமமான ஆண்டுத் தவணைகளாகச் செலுத்துகிறது.

இது பொதுக் கடனைச் செலுத்தும் மிக எளிதான முறையாகும்.

**கடன் மறுப்பு:**

அரசு கடன் செலுத்தும் சுமையிலிருந்து வெளி வருவதற்கான எளிமையான முறையாகும்.

சாதாரண சூழ்நிலைகளில் கடனை மறுக்க இயலாது. ஏனெனில் அது அரசின் நாணயத் தன்மையைப் பாதித்து விடும்.

**வட்டிவீதத்தை குறைத்தல் :**

நிதிச் சிக்கல் ஏற்படும் நேரங்களில் கட்டாயமாக வட்டியைக் குறைத்துக் கடனை செலுத்துவதும் ஒரு வகையான கடன் தீர்வு முறையாகும்.

**மூலதனத் தீர்வை:**

ஒரு தனிமனிதர் அல்லது நிறுவனம் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் அல்லது வளர்ச்சி போக்கில் உள்ள மூலதன சொத்துகள் பெற்றிருப்பின் அதன் மீது அரசு வரி விதிக்கிறது.

இது சர்ச்சைக்குரிய கடன் தீர்வை முறையாகும்.

23) கூட்டாட்சி நிதியின் கொள்கைகளை விளக்குக.

**பதில் : கூட்டாட்சியின் கொள்கைகள் :**

**சுதந்திரம் :**

கூட்டரசு நிதி முறையின் கீழ், ஒவ்வொரு அரசும் தன்னுடைய நிதியில் தன்னாட்சி அதிகாரம் கொண்டதாக இருக்க வேண்டும்.

ஒவ்வொரு அரசும் வருவாய் ஆதாரங்கள், வரி விதிப்பதற்கான அதிகாரம், பணத்தைக் கடன் வாங்குவது, செலவினை சமாளிப்பது முதலானவை பற்றி தன்னாட்சி பெற்றிருக்க வேண்டும்.

**சமத்துவம்:**

சமத்துவ நீதியின் அடிப்படையில், மாநிலங்கள் நியாயமான வருவாய்ப் பங்கினைப் பெறும் வண்ணம் வளங்கள் பங்கீடு செய்யப்பட வேண்டும்.

**ஒரே மாதிரியான தன்மை:**

கூட்டரசு முறையில், ஒவ்வொரு மாநிலமும் கூட்டாட்சி நிதிக்கு சம வரி செலுத்துதல்களை செய்ய வேண்டும்.

**நிதி வசதி:**

கூட்டரசு நிதி முறையில், மத்திய மாநில அரசுகளும் புதிய வரி ஆதாரங்களை தங்களது நிதி தேவைக்கேற்றவாறு பெருக்கிக் கொள்ள முடியும்.

**ஒருங்கிணைப்பும் ஒன்றுபடுதலும்:**

அனைத்து நிதிமுறைகளும் முழுவதும் நல்ல முறையில் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

நாட்டின் பல்வேறு அடுக்குகளுக்கிடையே உள்ள நிதி முறைகளில் ஒருங்கிணைப்பு அவசியமாகிறது.

**செயல் திறன் :**

நிதிமுறைகளை ஒன்றாக ஒருங்கிணைத்து, திறமையான முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும்.

ஏய்ப்பு, மோசடி ஆகியவற்றுக்கான வாய்ப்புகள் இருக்கக் கூடாது.

**நிர்வாகச் சிக்கனம் :** வசூலிக்கும் செலவு குறைவாக இருப்பதோடு அதிக வருவாய் பெற்று அரசின் பிற துறைகளுக்குச் செலவிடுவதற்கு ஏதுவாக அமைய வேண்டும்.

24) அரசுச் செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

**பதில் : பொதுச் செலவு அதிகரிப்பதற்கான காரணங்களாவன :**

**மக்கள் தொகை வளர்ச்சி :**

67 ஆண்டு கால திட்டங்களில், இந்தியாவின் மக்கள் தொகை 1951இல் 36.1 கோடியிலிருந்து, 2011இல் -121 கோடியாக உயர்ந்துள்ளது.

மக்கள் தொகை வளர்ச்சியினால் உடல்நலம், கல்வி, சட்டம் ஒழுங்கு போன்றவற்றிற்காக பேரளவு முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது.

இளைஞர்களுக்கான கல்விக்காகவும், பணிகளுக்காகவும், முதியோர்களுக்கான ஓய்வூதியம், சமூகப் பாதுகாப்பு, உடல் நலத்திற்கான வசதிகள் ஏற்படுத்தவும் பொதுச்செலவு அதிகமாகிறது.

**பாதுகாப்புச் செலவு:**

இந்தியாவில் பாதுகாப்பிற்கான செலவு அதிகரித்த வண்ணம் உள்ளது.

இராணுவ தளவாடங்களை புதுமை மயமாக்குவதால் இராணுவ செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

**அரசு மானியங்கள்:**

இந்திய அரசானது, உணவு, உரங்கள், முன்னுரிமைத் துறைக்கான கடன் வழங்கல், ஏற்றுமதி, கல்வி முதலான பல இனங்களுக்கு மானியங்களை வழங்குகிறது.

மானியங்களுக்கான தொகை மிக அதிகமாக இருப்பதால் பொதுச் செலவு பலமடங்கு அதிகரித்துள்ளது.

**கடன் சேவைகள் :**

அரசானது அதிகமான அளவில் உள்நாட்டு, அயல்நாட்டு ஆதாரங்கள் மூலம் கடன் பெற்றுள்ளது.

அதன் விளைவாக அரசு கடனை திருப்பி செலுத்துவதற்காக அதிக பணம் தேவைப்படுகிறது.

**வளர்ச்சித் திட்டங்கள் :**

அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்கள் மேற்கொள்கிறது. அவையாவன நீர்ப்பாசனம், இரும்பு எஃகு, கனரக எந்திரங்கள், எரிசக்தி, தொலைத்தொடர்பு போன்றவற்றிற்கு அதிக முதலீடு தேவைப்படுகிறது.

**நகரமயமாக்கல் :**

நகரங்களில் மக்கள் தொகை விரைவாக அதிகரித்து வருகிறது. 1950-51ஆம் ஆண்டு மொத்தம் மக்கள் தொகையில் நகரத்தில் வாழ்பவர்கள் 17 விழுக்காடாகவும், தற்பொழுது 43 விழுக்காடாகவும் அதிகரித்துள்ளது.

**தொழில் மயமாக்கல்:**

அடிப்படை, கனரக தொழில்களுக்கு அதிக அளவு மூலதனம் தேவைப்படுகிறது. மேலும் இது உற்பத்திக்கு நீண்ட காலத்தையும் எடுத்துக் கொள்ளும்.

25) நிதிக் கொள்கைகளின் கருவிகள் எவை? விளக்குக.

**பதில் : நிதிக் கொள்கை சில நிதிக் கருவிகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. அவையாவன, வரி விதித்தல் :**

வரிகள் மக்களிடமிருந்து வருமானத்தை அரசிற்கு மாற்றுகிறது.

வரிகள் நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ இருக்கும்.

எனவே பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வரியை அதிகப்படுத்த வேண்டும்.

மந்த காலத்தில் வரிகள் குறைக்கப்படவேண்டும்.

**பொதுச் செலவு :**

பொதுச் செலவு பணியாளர்களின் கூலியையும் சம்பளங்களையும் அதிகரிக்கும்போது பண்டங்கள், பணிகளுக்கான மொத்தத் தேவை உயருகிறது.

ஆகையால் பொதுச் செலவு பின்னிறக்கத்தையும், பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த உதவுகிறது.

**பொதுக்கடன் :**

அரசு, கடன் மூலம் பொது மக்களிடமிருந்து அரசிற்கு பணத்தை மாற்றம் செய்கிறது.

அது பின்னர் மக்களுக்கு திரும்ப வட்டியோடு செலுத்தப்படுகிறது. இதனால் அரசிடமிருந்து பணம் மக்களுக்கு மாற்றப்படுகிறது.